**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், போளூர், திருவண்ணாமலை மாவட்டம்</u>**

2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 05 ஆம் நாள் வியாழன் கிழமை 1873 ம் ஆண்டு 11 வது ஏற்பாட்டின்படி திரு.G.வீராங்கன், கிரேடு III பென்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு உறுதி செய்யப்படுகிறது.

**OS.No. 35/2022** வா.சா.1 என்பவரின் வாக்குமூலம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **பெயர்** | : | அமுதா | **வயது** | : | 48 |
| க.**பெ** | : | சிவானந்தன் | **தாலுக்கா** | : | ஆரணி |
| **கிராமம்** | : | புலவன்பாடி | **தொழில்** | : | விவசாயம் |

**<u>05.03.2026 – வா.சா.1 குறுக்கு விசாரணை</u>**

1)என்ன பரிகாரம் கேட்டு வாதிகள் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் வழக்கு சொத்து எங்களுக்கு வேண்டும் என்று வழக்கு தாக்கல் செய்துள்ளோம். அதை தவிர வேறு எந்த பரிகாரம் கேட்டும் தாக்கல் செய்யவில்லையா என்றால் இல்லை. வா.சா.ஆ-1ல் உள்ள விவரங்கள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ-1 பத்திரத்தில் என் தந்தை என்னென்ன சர்வே நெம்பரில் எவ்வளவு விஸ்தீரணம் கிரையம் பெற்றார் என்றால் சர்வே நெம்பர் ஞாபகம் இல்லை, 132 செண்ட் மட்டும் கிரையம் பெற்றார். வா.சா.ஆ-1 ல் உள்ள சர்வே நெம்பர்களில் ஜக்குபந்திகளை குறிப்பிடாமல் கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. வா.சா.ஆ-1 குறிப்பிட்டுள்ள 2 சர்வே நெம்பர்களும் சக்குபந்திகளும் குறிப்பிடாமல் தான் என் தந்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல.

2)1976 ல் எனக்கு என்ன வயது என்றால் நான் அப்போது பிறந்தே இருக்கமாட்டேன். தாவா சொத்து 1 ம் பிரதிவாதியின் பெயருக்கு மாற்றப்பட்டது 2021 ல் தான் எனக்கு தெரியுமா என்றால் பிரதிவாதிகள் தாவாசொத்தை வந்து அளக்கும்போது எங்களுக்கு தெரியவந்தது, அப்போது நாங்கள் தாவாசொத்தை அனுபவத்தில் இருந்தோம். பிரதிவாதிகள் நிலத்தை அளப்பதற்காக சர்வேயர் மூலம் எனக்கு அறிவிப்பு எதாவது அனுப்பினார்களா என்றால் அறிவிப்பு எதுவும் கொடுக்கவில்லை, வாய்மொழியாகத்தான் எங்களுக்கு கூறினார்கள். தாவா சொத்து உண்மையிலே நாங்கள் அனபவத்தில் இருந்திருந்தால் சர்வேயர் மூலம் அறிவிப்பு அனுப்பப்பட்டிருக்கும், மேலும் பிரதிவாதிகள் நிலத்தை அளந்தார்கள் என்று வழக்கில் நான் கூறியிருப்பேன் என்றால் சரியல்ல, நாங்கள் தாவாசொத்தில் அனுபவத்தில் தான் இருந்தோம். என் தந்தை 2011 ல் இறந்துவிட்டார்.

3)என் தந்தை இறப்பதற்கு முன்பே எனக்கு திருமணம் செய்துமுடித்துவிட்டார் என்றால் சரிதான். வாதிகளுக்கும் திருமணம் செய்து முடித்துவிட்டார்களா என்றால் சரிதான். திருமணம் முடித்துவிட்டு, வாதிகள் வெளியூரில் தான் சென்றுவிட்டார்களா என்றால் ஆமாம், ஆனால் என் அக்கா கனகா மட்டும் அவர் கணவருடன் என் அம்மா வீட்டிற்கு வந்து குடியிருந்து வருகிறார். பிரதிவாதிகள் மீது எப்போது போலிசில் புகார் அளித்தோம் என்றால் 2021ல் புகார் அளித்தோம். யார் புகார் அளித்தார்கள் என்றால் 5 வாதிகளும் சேர்ந்து புகார் அளித்தோம், போலிசார் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய கூறிவிட்டார்கள். போலிசில் புகார் மனு தாக்கல் செய்த மனுவின் நகல் அல்லது சிஎஸ் ஆர் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை, நான் பொய் கூறுகிறேன் என்றால் சரியல்ல.

4)1962 ல் வழக்கு சொத்தை என் தந்தை கூட்டுறவு சொசைட்டியில் அடமானம் வைத்தாரா என்றால் வைத்தார்கள், அதன்பிறகு மீட்டுவிட்டார். என் தந்தை எப்போது வழக்கு சொத்தை அடமானத்திலிருந்து மீட்டார் என்றால் எனக்கு தெரியாது, ஆனால் மீட்டுவிட்டார்கள் என்று என் தந்தை என்னிடம் கூறியுள்ளார். 1ம் பிரதிவாதியின் தந்தை கண்ணையன் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. என் தந்தை வழக்கு சொத்தை கூட்டுறவு சொசைட்டியில் அடமானம் வைத்து அதை பணம் கட்டி மீட்கவில்லை என்பதால் கூட்டுறவு சொசைட்டியின் மூலம் வழக்குசொத்தை ஏலத்திற்கு விட்டு அந்த ஏலத்தை 1ம் பிரதிவாதியின் தந்தை தான் பணத்தை செலுத்தி வழக்கு சொத்தை வாங்கியுள்ளார், மேலும் கூட்டுறவு சொசைட்டியில் கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரியல்ல.

5)இந்த தாவா சொத்தும் இதர சொத்துக்களும் 1ம் பிரதிவாதியின் தந்தை கடனுறுதிசீட்டு வேலூர் மாவட்ட உரிமையியில் நீதிமன்றம் ஓ.எஸ் 651/1971 என்ற வழக்கு தாக்கல் செய்துள்ள விவரம் என்கது தெரியுமா என்றால் தெரியாது (**இந்த சங்கதி பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் இல்லை என்றும், இந்த கேள்வியை கேட்கமுடியாது என்றும், வாதிகளின் வழக்கறிஞர் ஆட்சேபணை தெரிவித்தார், ஆட்சேபணையுடன் கேள்வியும் பதிலும் பதிவு செய்யபட்டது**) மேற்படி ஓ.எஸ்.651/1971 வழக்கை வாபஸ் பெறுமாறு என் தந்தை 1ம் பிரதிவாதியின் தந்தையிடம் கேட்டார், மேலும், கூட்டுறவு சொசைட்டியில் அடமானம் தாவாசொத்தை தவிர்த்து மற்ற சொத்துக்களை கிரையம் கொடுக்க ஒப்புக்கொண்டு வா.சா.ஆ-3 ஆவணம் எழுதி பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. (**இந்த சங்கதி பிரதிவாதியின் எதிர்வழக்குரையில் இல்லை என்றும், இந்த கேள்வியை கேட்கமுடியாது என்றும், வாதிகளின் வழக்கறிஞர் ஆட்சேபணை தெரிவித்தார், ஆட்சேபணையுடன் கேள்வியும் பதிலும் பதிவு செய்யபட்டது**)

6)வா.சா.ஆ.4 ல் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து தற்போது வரை நாங்கள் தான் பயிரிட்டு வருகிறோமா என்றால் ஆமாம். தாவா சொத்தானது வா.சா.ஆ.4 சொத்திற்கு அருகில் உள்ளது என்றால் சரிதான். தாவாசொத்தில் 1976 லிருந்து தற்போது வரை நாங்கள் அனுபவத்தில் இருந்தோம் என்பதற்கு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் மணிகாரிடம் அடங்கல் கொடுக்குமாறு கேட்டோம், பிரதிவாதி ஊர்தலைவர் என்பதால் அவருக்கு பயந்து மணிகார் எங்களுக்கு அடங்கல் கொடுக்கவில்லை. மேற்படி விவரத்தை நான் எனது வழக்குரையிலும், முதல்விசாரணை வாக்குமூலத்திலும் கூறியுள்ளேனா என்றால் தெரியவில்லை.

7)1962 ல் கூட்டுறவு சொசைட்டியில் தாவாசொத்தை மீட்பதற்காக 1ம் பிரதிவாதியின் தந்தை பணம் கொடுத்து மீட்டுள்ளார் அன்றைய தினத்திலிருந்து தாவாசொத்து பிரதிவாதிகளின் அனுபவத்தில் தான் உள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் நாங்கள் அனுபவத்தில் உள்ளோம் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் வழக்கு பிரதிவாதியின் செலவுதொகையுடன் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Taken down by me in open court read over to the witness and acknowledged by him/her to be correct.

SALMA BASEER

Digitally signed by SALMA BASEER
Date: 2026.03.05 17:41:51 +0530

District Munsif,
Polur.